1991 சனவரி 24] *[டாக்டர் மு. கருணாநிதி]*

நேரம் முடிகிற நேரத்தில் திடீரென்று அமெரிக்கப்படை விமானங்கள் ஈராக்கிலே நுழைந்ததே அதைப்போல (சிரிப்பு) படபடவென்று நுழைய வேண்டியது, நுழைந்தவுடனே ஒரு அமளியை ஏற்படுத்த வேண்டியது. ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் சட்டமன்றம் நடக்காமல் இருக்கிற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டியது, இவைகள் எல்லாம் முறைதானா? இப்படி நாங்கள் செய்ய மாட்டோம்; செய்ததற்காக நாங்கள் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறோம் என்று அவர்கள் எழுதித் தருவார்களானால், அறிக்கை விடுவார்களானால், அதற்குப் பிறகு, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய யோசனையை நாம் ஆராய்வோம்.

திரு. குமரி அனந்தன் : கனம் சபாநாயகர் அவர்களே, நான் இங்கே எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்பது மட்டுமல்லாமல், ஒரு சீனியர் மெம்பரே இதைக் கேட்கலாமா என்று தாங்கள் சொன்னீர்கள், முதல் நாள் நமக்கு ''அன்அட்டாச்டு'' என்று சொன்னதை மறுபரிசீலனை செய்து நல்லது வழங்கியதைப் போலே இதையும் வழங்குவீர்கள் என்று எதிர்பார்த்து நான் கேட்டேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. தாங்கள் அதை எங்களுக்குத் திருப்பிப் பரிசீலனையே செய்ய முடியாது என்றும் அவர்களுக்குக் கொடுத்த அந்தக் கடுமையான தண்டனையைக் குறைக்க முடியாது என்றும் சொன்னதற்கு நம் முதல்வர் அவர்கள் மறுமொழி நமக்குக் கொடுத்தார்கள். ஆனால் நாங்கள் இதிலே திருப்தி அடையவில்லை. எனவே நாங்கள் அறையிலே கூட உங்களை மீண்டும் வந்து சந்திப்பதற்கு, நீங்கள் அனுமதி கொடுத்தால் மீண்டும் வந்து உங்களிடம் எங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்து சமர்ப்பிப்பதற்கு தயாராக இருக்கிறோம். அதற்கு நீங்கள் வாய்ப்பு அளித்தால் நாங்கள் தயாராக இருக்கிறோம். அப்படி இல்லையென்று சொன்னால், அப்படி ஒரு வாய்ப்புக் கொடுத்து எங்களுடைய மனக்குறையைப் போக்குகின்ற அளவுக்கு நிறைவான ஒரு பதில் கொடுப்பது வரை நாங்கள் இந்த அவையினுடைய நடவடிக்கையில் கலந்துகொள்ள முடியாத ஒரு சூழ்நிலை எங்களுக்கும் இருக்கிறது. எங்கள் கட்சித் தலைவரைக் கலந்து கொண்டு அவர்கள் எப்போது சொல்கிறார்களோ அப்பொழுது தான் நாங்கள் மீண்டும் கலந்து கொள்கின்ற நிலை ஏற்படும். அந்த நிலை ஏற்படாத அளவுக்கு மீண்டும் நான் சொல்கிறேன். தயவு செய்து இதை ஒரு சுமுகமான நிலைக்கு கொண்டு வருவதற்கு மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டு ... ...

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நீங்களும் ஒரு முடிவு எடுத்துக்கொண்டுதான் வந்திருப்பதாகத் தெரிகிறது. (சிரிப்பு) வேறு வழியில்லை, என்ன செய்வது? நான் இல்லை என்று கூறவில்லை. நான் அப்பொழுதே மிகச்சாதாரணமான ஒரு நிபந்தனையை தான் சொன்னேன். அதை

அவர்கள் ஏற்றுக்கொள்ளலாம். வழக்கமாக சட்டமன்றத்திற்கு வந்தால் ஒவ்வொரு நாளும் ஒரு தகராறு செய்து சட்டமன்றம் நடக்கவிடாமல் ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம்—வெளியேறுவது வேறு, வெளியேற்றப்படுகிற சூழ்நிலையை தினம் தினம் உண்டாக்கிக் கொண்டிருப்பது முறை தானா? அதற்கு அவர்கள் இனிமேல் இப்படிச் செய்ய மாட்டோம் என்ற உத்திரவாதம் அளிப்பார்களா? இதுவரையில் 2 தடவை, 3 தடவை நம்முடைய இலக்கியச் செல்வர் அவர்களிடத்திலே சொல்லியிருக்கிறேன். நீங்கள் போய் அவர்களை சமாதானம் செய்யுங்கள், இப்படிச் செய்ய மாட்டோம் என்ற உறுதியை வாங்கினால் அவர்கள் அனுமதிக்கப்படலாம் என்று சொன்னேன். ஆனால் நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தாழ்வாரம் வரையிலே சென்று இங்கே திரும்பி வந்து, உதட்டைப் பிதுக்கி, அது ஒன்றும் முடியவில்லை என்று சொன்னார்களே தவிர, அவர்களுடைய கோரிக்கையை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களுடைய வேண்டுகோளை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

10–40 மணி

இங்கே வந்து அமைதியான முறையில், அதற்காகக் கூச்சல் குழப்பமே இல்லாமல் சட்டசபையை நடத்த வேண்டும் என்பது முடியாத காரியம், சில நேரங்களில் உணர்ச்சி வயப்பட்டு நாம் உரத்த குரலிலே பேசுவது, கடுமையான சொற்களைப் பயன்படுத்துவது, சில சொற்களைப் பாராளுமன்ற முறைக்கு இயலாத சொற்களை அவைக் குறிப்பிலிருந்து எடுப்பது இவைகள் எல்லாம் அவையிலுள்ள அன்றாடம் தோன்றி மறையும் நடைமுறைகள்தான். அதற்காக அதுவே தான் நடைமுறைகளாக ஆகிவிடுமானால் நாம் மக்கள் பிரச்சினைகளை—நேற்றையதினம் திரு. லத்தீப் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதுபோல்-அவர்களுடைய பணத்தைக் கொண்டு நடைபெறுகின்ற மாமன்றத்தில், அவர்களுடைய பணத்தை நாம் விரயம் ஆக்கிக்கொண்டிருக்கிறோம் என்ற குற்றச்சாட்டுகளுக்கு, ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி மற்ற எல்லாக் கட்சிகளும் ஆளாகி விடக்கூடும் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேனே அல்லாமல், வேறு அல்ல. அவர்கள் ஒரு நிபந்தனைக்கு உட்பட்டு வரத் தயாராக இருந்தால் எங்களுக்கு எந்த விதமான மறுப்பும் இல்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...............

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்லுவதை நாம் எல்லோரும் கேட்டுக்கொண்டு இருந்த நேரத்தில் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். நீங்களும் ஒரு முடிவு எடுத்து விட்டுத் தான் வந்து இருப்பீர்கள்